திரு. பொன். ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, பொன்னேரி தொகுதியில் சிறுவாபுரி முருகன் கோயில் மிகவும் பிரசித்தி பெற்ற கோயிலாகும். இக்கோயிலுக்கு செவ்வாய் மற்றும் கிருத்திகை, பௌர்ணமி நாட்களில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் வந்து செல்வதால், அந்தக் கோயிலுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளும் மற்றும் பயணிகள் தங்கிச் செல்வதற்கு ஒரு கட்டடமும் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே, சமராபுரி என்று சொல்லக்கூடிய திருச்செந்தூரில் உள்ள முருகன் கோயிலை போல, சிறுவாபுரி என்ற இடத்தில் ஒரு பிரசித்தி பெற்ற முருகன் கோயில், பொன்னேரி தொகுதியிலே இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, அங்கே அதிகமாக பக்தர்கள், சுற்றுலாப் பயணிகள் சென்று வருகின்றார்கள். ஆகவே, அவருடைய இந்தக் கோரிக்கை நிச்சயமாகப் பரிசீலனைக்கு எடுத்து, இந்த நிதியாண்டிலேயே, சுற்றுலாப் பயணிகளும், பக்தர்களும் வந்து செல்லக்கூடிய வகையில், அடிப்படை வசதிகளைச் செய்ய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதை இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

67—

பேருந்துப் பணிமனை

***6199—திரு. மு. முருகன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2012 ஏப்ரல் 10]

(அ) முதுகுளத்தூர் தொகுதி, கடலாடி வட்டம், சாயல்குடியில் புதிய பேருந்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் சார்பில், முதுகுளத்தூர் தொகுதி, சாயல்குடியில் பணிமனை அமைத்திட இடம் தேர்வு செய்யப்பட்டு, நிலம் ஒதுக்கீடு செய்து தர மாவட்ட நிருவாகத்திடம் கோரப்பட்டுள்ளது. நிலம் ஒதுக்கீடு கிடைக்கப்பெற்ற பின் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவு பெற்று, பணிமனை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.*

திரு. மு. முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, என்னுடைய கேள்வியைத் தொடர்கிறேன். கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக அரசு ஓர் அடிக்கல் நாட்டு விழா என்று நடத்திவிட்டு, பணிகள் எதுவுமே தொடங்காமல், எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் விட்டுச் சென்றுள்ளது. அதனால், கேட்டதைக் கொடுக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, சாயல்குடி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையைக் கனிவோடு பரிசீலனை செய்து இதை நிறைவேற்றித் தரவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். அதாவது சாயல்குடி பகுதிகளில் இரவு நேரங்களில் பேருந்துகளை நிறுத்த முடியாமல் அருகேயுள்ள பணிமனைகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. 25 கிலோ மீட்டர் தூரமுள்ள முதுகுளத்தூருக்கும், 35 கிலோ மீட்டர் தூரமுள்ள கமுதிக்கும், 45 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள இராமநாதபுரத்திற்கும், 60 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள தூத்துக்குடி ஆகிய பணிமனைகளுக்கு வண்டிகளை எடுத்துச் செல்வதால் கூடுதல் செலவினங்கள் ஆகிறது. எனவே, பணிமனை அமைத்தால் வசதியாக இருக்கும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கனிவோடு இந்தக் கோரிக்கையைப் பரிசீலனை*

செய்து பணிமனையை ஏற்படுத்தித் தர வேண்டுமாய் மீண்டும் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுகுளத்தூர் தொகுதி, சாயல்குடியில் மட்டுமல்ல; முந்தைய 5 ஆண்டுக் கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் பல்வேறு இடங்களிலே போக்குவரத்துப் பணிமனைகள் அமைக்கப்படும் என்று இடங்களைக்கூட தேர்வு செய்து, கையகப்படுத்தாமல் அறிவிப்போடு நிறுத்திவிட்டார்கள். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொது மக்களுக்குத் தரமான சேவைகள் வழங்க வேண்டும்; அதேபோல பேருந்துகளுடைய பராமரிப்புகள் என்பது தரமாக இருக்க வேண்டும்; மக்களுக்கு ஏற்ற அளவில் இருக்க வேண்டுமென்றும், எங்கெல்லாம் பணிமனைகள் அமைக்கப்பட வேண்டுமோ, அங்கெல்லாம் ஆய்வுகள் மேற்கொண்டு, அந்த இடங்களில் உரிய பேருந்துகள் இருக்கும்பட்சத்தில், அதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன்படி, முந்தைய ஆட்சிக் காலத்தில் விட்டுச்சென்ற, இந்தச் சாயல்குடியில் பணிமனை அமைக்கின்ற பணிக்கு இடங்கள் தேர்வு செய்யவேண்டுமென்று மாவட்ட ஆட்சியரிடம் கருத்துரு கோரப்பட்டுள்ளது. கருத்துரு வரப்பெற்ற பின், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவு பெற்று பணிமனை அமைப்பதற்கு விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.

திரு. மு. முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக அரசு, ஒரு இடத்தைத் தேர்வு செய்து, அந்த இடத்தில் அடிக்கல் நாட்டு விழாவும் நடத்தியுள்ளது. மீண்டும் அதே இடத்திலேயே பணிமனை ஏற்படுத்தித் தரப்படும் என்ற அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.